**தங்கல்ல நகர சபை - 2020**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தங்கல்ல நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) உப பிரிவு 181(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, தங்கல்ல நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய

முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,
- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் கூட்டுத்தொகை ரூபா 3,714,520 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2019 ஆண்டிற்கான அட்டவணைகள் 2020 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின்னர் கிடைத்துள்ளன எனவும் ஆண்டிற்கான அட்டவணைகள் அனைத்தும் கிடைத்த பின்னர் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையினை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | வருமானத்தை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டின் போது வெள்ளத்தினால் அனர்த்தத்துக்கு உள்ளாகிய வீடுகளை மீண்டும் செப்பனிடுவதற்காக சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,972,159 இற்கான செலவினை மீளளிப்புச் செய்வதற்காக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த ரூபா 1,000,000 இற்கான தொகையினை செலவு மீளளிப்புச் செய்தல் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செலவு மீளளிப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| என குறிப்பிடாமல் வைப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 194,540 இற்கான மூலதனச் சொத்துக்கள் நிர்மாணிக்கும் செலவு மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 16,518,527 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 16,424,786 தொகை ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| i. பெற வேண்டிய வீத வரி ரூபா 2,880,057 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| ii. பெற வேண்டிய களியாட்ட மற்றும் வியாபார வரி ரூபா 203,596 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வியபார வரி ரூபா 67,560 தொகையினை பதிவழிப்பதற்காக ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்பட்டது எனவும் மற்றும் மீதியான நிலுவைகளை எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| **(ஆ) வாடகை** | | |
| i. பெற வேண்டிய கடையறை வாடகை மற்றும் தண்டப் பணம் முறையே ரூபா 6,362,929 தொகை மற்றும் ரூபா 432,495 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் பெற வேண்டிய கடை வாடகைக்காக காலப் பகுப்பாய்வு ஒன்றும் தயாரித்திருக்கவில்லை. | கடை வாடகையை அறவீடு செய்வதை இடைநிறுத்தும் படி தங்கல்ல பிரதேசம் சார் உயர்நீதி மன்றத்தினால் இடைக் காலத் தடை உத்தரவு ஒன்று விதிக்கப்பட்டிருந்தது எனவும், அந்த வழக்கு முடிவடைந்த பின்னர் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் காலப் பகுப்பாய்வு எதிர்காலத்தில் சமர்ப்பிப்பேன். | நிலுவை வாடகை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | பெற வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 2,861,342 தொகைக்கான காணிக் குத்தகை, கட்டிட வாடகை மற்றும் மீனவர் ஓய்வு கூட வாடகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 468,656 தொகைக்கான நிலுவைக் காணிக் குத்தகை தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் வழக்கு ஒன்று காணப்படுவதினால் அறவீடு செய்ய முடியாமல் போனது எனவும் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வாடகை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| **(இ)** | **அனுமதிப்பத்திரக் கட்டணம்**<br>------------------------------------------------ | | |
| | பெற வேண்டிய அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 152,000 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 110,500 தொகையினை பதிவழிப்பதற்கு ஆளுனருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் மீதிளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |
| **(ஈ)** | **நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>------------------------------------------------------ | | |
| | மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 20,622,445 தொகை காணப்பட்டது. | மீதியை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | - மேற்படி - |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

------------------------------

நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**3.1 முகாமைத்துவத் திறமையின்மை**

-----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நகர சபையின் அங்கத்தவர்களுக்கான மாதாந்த தொலைபேசிக் கட்டண கொடுப்பனவு செலுத்தும் போது தொலைபேசிக்கு உரிய நிரந்தரக் கட்டணம், அழைப்புக் கட்டணத்திற்கான 22.6 சதவீத வரி கட்டணம் தொடர்பாக கவனம் செலுத்தாமல் ஐந்து அங்கத்தவர்களுக்கு ரூபா 15,187 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மாதாந்தச் செலவு மீளளிப்பு எல்லையை மிகைத்து மூன்று அங்கத்தவர்களுக்காக கூட்டுத்தொகை ரூபா 27,450 இற்கான தொலைபேசிக் கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாக செலுத்தப்பட்டுள்ள ரூபா 15,187 தொகையினை அடுத்த பில் பத்திரங்கள் செலுத்தும் போது பதிலீடு செய்யப்படும் எனவும் வருடாந்தம் செலுத்தக் கூடிய எல்லையை மிகைத்து பில் பத்திரங்களுக்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை. | சரியான வரி சதவீதத்தை கணித்து மற்றும் மாதாந்த தொலைபேசி செலவு மீளளிப்பு எல்லையை மிகைக்கக் கூடாது. |